KANTON AARGAU

hallo — aargau.ch

# இயக்கம்

புகையிரதமும் பஸ்சும்
துவிச்சக்கர வண்டி / நடத்தல்
கார் / மோட்டார்வண்டி
சாரதிப்பத்திரம்

KANTON AARGAU

hallo — aargau.ch

# புகையிரதமும் பஸ்சும்

சுவிஸில் பகிரங்கப் போக்குவரத்து மிகவும் நன்றாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடங்களையும் புகையிரதத்திலோ அன்றி பஸ்சிலோ அடையலாம். போக்குவரத்து சரியான நேரத்திற்கும் ஒழுங்கான நேர இடைவெளியிலும் இருக்கும்.

## பகிரங்கப் போக்குவரத்து

சுவிஸின் பகிரங்கப் போக்குவரத்து (ÖV) ஒரு உயர்ந்த நிலை வகிக்கிறது. ஓவ்வொரு இடங்களையும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் பல தடவை அடையக்கூடியதாக இருப்பதால் அதிகமானோர் புகையிரதம் அல்லது பஸ்ஸைப் பாவிக்கிறார்கள். இதில் பிரயாணம் செய்வது ஓரளவு அதிக செலவாயிருந்தாலும் காசு மிச்சம் பிடிக்கக் கூடியமாதிரி பல வழிகளும் உண்டு. ஒரு சந்தா அல்லது மலிவுக்காட் வாங்குவதும் பிரயோசனப்படும்.மிகவும் மலிவான அரை விலைச்சந்தாவுடன் (Halbtaxabo) உதாரணத்திற்கு சுவிஸ் முழுவதும் அரைவாசி விலையில் பிரயாணம் செய்யலாம்.

## பிரயாணச் சீட்டும் சந்தாவும்

எவர் புகையிரதத்தில் பயணப்பட விரும்புகிறாரோ அவர் பயணத்தின் முன்பு ஒரு பிரயாணச்சீட்டு (Billett) வாங்கவேண்டும். புகையிரதத்துள் பிரயாணச்சீட்டு வாங்க முடியாது. பஸ்களில் வேறு விதமாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். ஓவ்வொரு புகையிரத நிலையத்திலும் அதிகமான பஸ் நிலையங்களிலும் பிரயாணச்சீட்டு இயந்திரங்களும் பெரிய புகையிரத நிலையங்களில் கருமபீடங்களும் காணப்படும். பிரயாணச்சீட்டுக்களை கணினியிலும் கைத்தொலைபேசியிலும் வாங்கலாம். அதிகமான பிரயாணங்கள் செய்பவர்களுக்கு பலதரப்பட்ட சந்தாக்கள் உள்ளன. இவை ஒரு தூரத்திற்குஇ ஒரு பிரதேசத்திற்குள் இஅல்லது சுவிஸ் முழுவதும் (Generalabonnement) என்பனவாகும். 6 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் இலவசமாகப் பயணிக்கலாம். பிள்ளைகள் 16 வயது வரை பெற்றோருடன் அல்லது பேரன் பேத்தியுடன் ஓரளவு இலவசமாகப் பயணம் செய்ய இளையவர் - அல்லது பேரர் அட்டை (Junior- oder Enkelkarte) வைத்திருக்க வேண்டும். பிரயாணச்சீட்டுக்கள் சந்தாக்கள் பற்றிய தகவல்களை சுவிஸ் அரச புகையிரதம் (SBB) அல்லது பஸ் போக்குவரத்து சபையில் பெறலாம் .

## அறோ மாநிலம் - A-Welle

அறோ மாநிலத்தின் பணிப்பின் பெயரில் விலை நிர்ணயசபை யு- றுநடட ந (Tarifverbund A-Welle ) மூலம் விசேட விலையில் பிரயாணச் சீட்டுக்கள்இபிரயாணச் சந்தாக்கள்இ 1 நாள் பயணச் சீட்டுகளைப் பெறலாம். இந்தப் பகுதிக்குள் பல வலயங்கள் அடக்கப்பட்டுள்ளன. இந்தப்பிரயாணச்சீட்டு வாங்கப்பட்ட வலயத்திற்குள் புகையிரதத்திலும் பஸ்ஸிலும் பாவிக்கலாம். குறிப்பிட்ட வலயத்திற்கு வெளியில் பிரயாணம் செய்வதற்கு மேலதிகமாக பிரயாணச் சீட்டு வாங்க வேண்டும்.

## கிராமசபைகளின் 1 நாள் பயணச்சீட்டு

எவர் ஒரு நீண்ட பிரயாணத்தைச் சுவிஸ்க்குள் திட்டமிடுகிறாரோ அவர் அதிகமான கிராமசபைகளிலுள்ள 1 நாள் பயணச்சீட்டை (Gemeindetageskarte) மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். எனினும் இந்த வசதி மட்டுப்படுத்தப்பட்டபடியால் பயணச்சீட்டை முற்கூட்டியே பதிவுசெய்யவேண்டும். இது பற்றிய தகவல்களைக் கிராமசபை நிர்வாகத்தில் பெறலாம்.

## இரவு வலையமைப்பு

அறோ மாநிலத்தில் வார இறுதி நாட்களிலும் பின் இரவு நேரத்திலும் புகையிரதமும் பஸ் சேவையும் உண்டு. கவனம்: இரவுப் பிரயாணத்தின் போது பிரயாணச் சீட்டுடன் விசேட மேலதிக கட்டணமும் அறவிடப்படும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.konnichiwa-aargau.ch/ta/mobility/train-and-bus

# துவிச்சக்கர வண்டி / நடத்தல்

அறோ மாநிலத்தில் அமைக்கப்பட்ட வலைப்பின்னல் போன்ற துவிச்சக்கர வண்டிப் பாதைகள் மிகவும் வசதியானவை. அதிகமான தொழில்புரிவோர் துவிச்சக்கர வண்டியிலேயே வேலைக்குச் செல்லுகின்றனர். பாதசாரிகளுக்கும் மலையேறுபவர்களுக்கும் தனிப்பட்ட பாதையுள்ளது.

## துவிச்சக்கர வண்டியிலோ (Velo) அல்லது நடந்தோ வெளியே செல்லுதல்

அறோ நகரமும் கிராமசபைகளும் துவிச்சக்கர வண்டியோடிகளுக்கும் நடப்பவர்களுக்கும் கவர்ச்சியானதும் பாதுகாப்பானதுமாகும். இதனாலேயே குறைந்த தூரங்களுக்கு அதிகமானோர் காரைத் தவிர்க்கின்றனர். அதிகமான இடங்களில் விசேட துவிச்சக்கரவண்டிப்பாதைகளும் ஒற்றையடிப்பாதைகளும் உள்ளன. பாதசாரிகளுக்கென மஞ்சள் கோடுகளும் அதில் பாதசாரிகளுக்கு வாகனங்களைவிட எப்போதும் முன்னுரிமை (வீதியைக் கடக்கும் போது சமிஞ்சை விளக்கு இல்லாவிடின்) அறோ மாநிலத்தில் அதிகமான அழகான நடை பாதைகளும் - மலையேறும் பாதைகளும் உங்கள் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தக்கூடிய மாதிரி உள்ளன. மலையேறும் பாதைகள் மஞ்சள் நிற வழிகாட்டிகளால் குறிக்கப்பட்டீருக்கும்.

## துவிச்சக்கரவண்டியோட்டிகளுக்குரிய விதிகள்

சுவிஸில் துவிச்சக்கர வண்டியோடிகளுக்குப் பரீட்சையோ அன்றி விசேட அடையாள அட்டையோ கிடையாது. வாகனச்சாரதிகளுக்குரிய அதே பொதுவான போக்குவரத்து விதிகளே இருக்கும். தனியான துவிச்சக்கர வண்டிப்பாதைகள் இருப்பின் அதையே பாவிக்கவேண்டும். துவிச்சக்கரவண்டி ஓடக்கூடிய நிலையிலிருக்க வேண்டும். (இரு நல்ல பிறேக்குகள் பெல் முன்னும் பின்னும் பிரதிபலிப்பான்கள் பெடலுக்கு முன்னும் பின்னும் லைற் என்பன. தலைக்கவசம் அணிவது கட்டாயமில்லை. ஆனாலும் அணிவது நல்லது. துவிச்சக்கர வண்டியோட்டிகள் ஒரு தனியார் பொறுப்புக் காப்பீடு செய்திருந்தால் ஏதாவது சேதங்கள் ஏற்பட்டால் (ஆட்கள் பொருட்கள் ) காப்பீடு பொறுப்பெடுக்கும்.

## துவிச்சக்கர வண்டி பழகுதல்

துவிச்சக்கர வண்டி ஓட விரும்புபவர்கள் முதலில் ஒரு வகுப்புக்குப் போகவேண்டும். இந்த வகுப்புகள் மாநிலத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் துவிச்சக்கரவண்டிக் கழகங்களில் (Pro Velo) நடக்கும். வெளி நாட்டவர்களுக்கென சில கிராமசபைகளில் விசேட வகுப்பு நடைபெறும். பாவித்த மலிவான துவிச்சக்கர வண்டிகளை துவிச்சக்கர வண்டிச் சந்தைகளில் (Velobörsen) இல் வாங்கலாம்.

## துவிச்சக்கரவண்டியை எடுத்துச்செல்லுதல்

துவிச்சக்கர வண்டியை புகையிரதத்திலோ அன்றி பஸ்சிலோ எடுத்துச் செல்ல விசேட பிரயாணச்சீட்டு எடுக்கவேண்டும். எப்போதும் எங்கேயும் துவிச்சக்கர வண்டியை எடுத்துச்செல்லலாம். சிலவேளை இடத்தை முற்கூட்டியே பதிவுசெய்ய வேண்டும்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.konnichiwa-aargau.ch/ta/mobility/bicycle--on-foot

# கார் / மோட்டார்வண்டி

சுவிஸில் வளர்ச்சியடைந்த வீதி வலையமைப்பு உள்ளது. அதிகமான வீதிகளைக் கட்டணமின்றிப் பயன்படுத்தலாம். போக்குவரத்து விதிகள் முக்கியமானவை. அதைக் கடைப்பிடிக்கத் தவறினால் அபராதப்பணம் அதிகம் கட்டவேண்டும்.

## போக்குவரத்து விதிகள்

சுவிஸில் போக்குவரத்து விதிகள் கார் ஓட்டுனர்களுக்கு மிகவும் முக்கியமானவை. மற்றைய நாடுகளை விட இங்கு அபராதப்பணமும் அதிகம். போக்குவரத்து விதியைக் கடுமையாக மீறினால் சாரதிப்பத்திரம் பறிக்கப்படலாம்.

முக்கியமான சில விதிகள்:

- அதிகூடிய வேகம் நகரப்பகுதிகளில்: 50 km/h; நகர வெளிப்பகுதிகளில்: 80 km/h, நெடுஞ்சாலையில் 120 km/h
- நெடுஞ்சாலையில் வலது புறமாக முந்திச்செல்லலுக்குத் தடை.
- பகலிலும் லைற் போட்டிருக்கவேண்டும்.
- காரில் பயணிக்கும் அனைவரும் பட்டி அணிந்திருக்க வேண்டும்.
- பிள்ளைகள் பிள்ளைகளுக்குரிய விசேட இருக்கையில் இருத்தப்பட வேண்டும். (12 வயது வரை அல்லது 150 செமீ உயரம்)
- வாகனம் செலுத்தும் போது இன்ரர்காமில் மட்டும் தொலைபேசலாம்.
- மதுபானம் - போதைப் பொருட்கள் பாவித்த (புரோமில் அளவு எல்லை 0.5) பின் வாகனம் செலுத்துவது தண்டனைக்குரியது.
- பாத சாரிகள் மஞ்சள் நடைபாதையில் இருந்தால் எப்போதும் அவர்களுக்குத் தான் முன்னுரிமை (வீதியைக் கடக்கப் போக்குவரத்து விளக்குகள் இல்லாதபோது )

## வீதிக்கட்டணங்கள்

வீதிகள் அரசு மாநிலம் கிராமசபையால் செலவு செய்து நிர்வகிக்கப்படுகின்றன. வீதிகளைப் பயன்படுத்துவது கட்டணமற்றது.நெடுஞ்சாலைகள் இதற்கு விதிவிலக்கானவை: நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்த விரும்புபவர்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு வரிவடிவம் (Vignette) வாங்கவேண்டும். இதைக் காரின் கண்ணாடியில் ஒட்டவேண்டும். இந்த வரி வடிவத்தைப் பெற்றோல் நிரப்பு நிலையங்களிலோ தபால்கந்தோரிலோ அல்லது வீதிப்போக்குவரத்து இலாகாவிலோ பெறலாம்.

## காப்பீடு

சுவிஸில் மோட்டார் வாகனங்களுக்குக் காப்பீடு செய்திருந்தால் மட்டுமே பாவிக்க முடியும். மோட்டார் வாகனப் பொறுப்புக் காப்பீடு (Motorfahrzeug-Haftpflichtversicherung) பல வகையான தனிப்பட்ட காப்பீட்டாளர்களால் செய்யப்படுகிறது. இந்தக் காப்பீடு பொருட்களுக்கோ அன்றி மனிதர்களுக்கோ அந்த வாகனத்தால் ஏற்படும் சேதங்களுக்குப் பணம் செலுத்துகிறது. சொந்த வாகனத்துக்கு ஏற்படும் சேதங்களுக்கு உதவுவதற்கு மேலதிகமாக பலவகையான சுய இடர்காப்பீடுகள் உள்ளன (Kaskosversicherung). கவனம்: யாராவது முரட்டுத்தனமாகக் கவனக்குறைவால் சேதம் ஏற்படுத்தியிருந்தால் (உதாரணத்திற்கு மதுபானம் அல்லது போதைப் பொருட்கள் பாவித்திருந்தால்). காப்பீடு பெறமுடியாது. மோட்டார் வாகனப் பொறுப்புக் காப்பீடானது தனியார் பொறுப்புக்காப்பீட்டில் உள்ளடங்கி இருக்காது.

## ஒரு மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்தல்

ஒரு மோட்டார் வாகனத்தை நிரந்தரமாக சுவிசுக்கு இறக்குமதி செய்ய விரும்பினால் இதைச் சுங்கத்திணைக்களத்திற்கு அறிவித்து வரிசெலுத்தவேண்டும். வாகனத்தின் தொழில்நுட்பமும் பரிசோதிக்கப்பட வேண்டும். மோட்டார் வாகனப்பொறுப்புக் காப்பீடு செய்திருந்தால் தான் சுவிஸ் வாகனப்பத்திரமும் சுவிஸ் இலக்கத்தகடும் எடுக்க முடியும். சரியான தகவல்களை அறோ மாநில வீதிப்போக்குவரத்து இலாகாவில் (Strassenverkehrsamt) பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.konnichiwa-aargau.ch/ta/mobility/car--motorcycle

KANTON AARGAU

hallo — aargau.ch

# சாரதிப்பத்திரம்

சுவிஸில் கார் அல்லது மோட்டார்வண்டி ஓடவேண்டுமாயின் செல்லுபடியான சாரதிப்பத்திரம் வைத்திருக்கவேண்டும். வெளிநாட்டுச் சாரதிப்பத்திரங்கள் சுவிஸில் குடியேறிய பின்பு மாற்றப்படலாம்.

## வெளிநாட்டுச் சாரதிப்பத்திரம்

வெளிநாட்டுச் சாரதிப்பத்திரத்துடன் (Führerausweis) சுவிசுக்குக் குடியேறுபவர்கள் குடியேறி 12 மாதங்களுக்குள் சுவிஸ் சாரதிப்பத்திரத்திற்கு மாற்றலாம். அதற்காக ஒரு விண்ணப்பம் எழுதி மாநில வீதிப்போக்குவரத்து இலாகாவுக்கு (Strassenverkehrsamt) அனுப்பவேண்டும். எந்த நாட்டின் சாரதிப்பத்திரம் என்பதைப் பொறுத்து மாற்றுவதற்குரிய சட்டதிட்டங்களும் வேறுபடும். சோதிப்பதற்காக ஓடிக்காட்ட வேண்டி வரலாம் அல்லது சுவிஸ் கோட்பாடு சோதனை எழுதவும் வரலாம். மேலதிக தகவல்களுக்கு அறோ மாநில வீதிப்போக்குவரத்து இலாகாவை நாடலாம்.

## சாரதிப்பரீட்சை

சுவிஸில் ஒரு சாரதிப்பத்திரம் பெறுவதற்கு பரீட்சை அவசியம். சாரதிப்பரீட்சையில் ஒரு கோட்பாடும் செய்முறையும் உண்டு. 17 வயதிற்கு மேற்பட்டால் தான் பரீட்சைக்குப் போகலாம். அறோ மாநிலத்தில் கோட்பாடுப் பரீட்சையை டொச் பிரெஞ் மற்றும் இத்தாலி மொழிகளில் ஏதாவதொன்றில் எழுதலாம். இதற்குரிய முன்நிபந்தனை கள் மற்றும் சரியான நடைமுறைகள் பற்றி வீதிப்போக்குவரத்து இலாகா அறியத் தரும். பாரிய வாகனங்கள் பஸ்கள் டாக்ஸி ஓடுவதற்கு விசேடமான பரீட்சைகள் செய்யவேண்டும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.konnichiwa-aargau.ch/ta/mobility/drivers-license